

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.12.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும், டிசம்பர் 3 இயக்கத்தின் மாநிலத் தலைவருமான பேராசிரியர் தீபக் நாதன், தமிழ்நாடு அனைத்துவகை மாற்றுத்திறனாளி பகுதிநேர ஆசிரியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஜலீல் முகைதீன், தமிழ்நாடு என்.எச்.எம். பணியாளர்கள் கூட்டமைப்பின் மாற்றுத்திறனாளிகள் பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர் ஆ.பகவதிக்குமார், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மாற்றுத்திறனாளிகள் ஊழியர்கள் நலச்சங்கத்தின் மாநிலத் தலைவர் பஹாத் முகம்மது மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி மன்றங்களில் நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டு, உள்ளாட்சி மன்றங்களில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு வருவதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2025) பேராசிரியர் அவர்களின் 103வது பிறந்தநாளையொட்டி சென்னையில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். அமைச்சர்கள் எஸ்.எஸ். சிவசங்கர், பி.கே.சேகர்பாபு, சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பேராசிரியர் அவர்களின் மகன் அ.அன்புச்செல்வன், பேரனும் சட்டமன்ற உறுப்பினருமான அ. வெற்றி அழகன், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் மற்றும் பேராசிரியர் அவர்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

# அர.திருவிடம் போல் ஒவ்வொரு கருப்பு-சிவப்புத் தொண்டனும் ஒரு தனிமனித இயக்கமாகவே வளர வேண்டும்!

## திருவாரூரில் நடைபெற்ற புகழ் வணக்கக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழுரை!

திருவாரூர், டிச. 21–

**திருவாரூர் கலைஞர் கோட்டத்தில், திராவிட இயக்க எழுத்தாளர் – கழகத்தின் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் செயலாளராகச் செயலாற்றிய, மறைந்த அய்யா திருவாரூர் அர.திருவிடம் அவர்களின் புகழ் வணக்கக் கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வரவேற்புரையாற்றினார்.**

**இதைத் தொடர்ந்து அய்யா திருவிடம் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து, அவர் திராவிட இயக்கத்துக்கும் – கழகத்துக்கும் ஆற்றிய தொண்டுகளை எடுத்துரைத்தார்.**

**அப்போது அவர், 'திராவிட இயக்கத்தில் இருக்கின்ற ஒவ்வொரு கருப்பு–சிவப்புத் தொண்டனும் ஒரு தனிமனித இயக்கமாகவே வளர வேண்டும். நீங்கள் ஒவ்வொருவருமே ஒரு தனிமனித இயக்கமாக இருப்பதால்தான், திராவிட இயக்கத்தை அழிப்போம் என்று வருபவர்களை ஓடவிடுகின்ற இயக்கமாக தி.மு.க திகழ்கிறது' என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

இன்றைக்கு நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கக்கூடிய திராவிட இயக்க ஆய்வாளர், கழகத்தின் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் செயலாளராகச் சிறப்பாகப் பணியாற்றிய ஐயா திருவிடம் அவர்களின் நினைவைப் போற்றுவதற்காக நாம் அத்தனை பேரும் இங்கே கூடியிருக்கின்றோம்.



### கலைஞர் பாராட்டு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில், அமைந்திருக்கின்ற இந்த கலைஞர் கோட்டத்தில், அய்யா திருவிடம் அவர்களின் புகழ் வணக்கக் கூட்டம் நடைபெறுகிறது. ஒரு எழுத்தாளரை நம் திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவுக்கு மதிக்கும் - கொண்டாடும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது. எழுத்துத் துறையில் சிகரத்தைத் தொட்ட டாக்டர் கலைஞர் அவர்களால் பலமுறை பாராட்டப்பட்ட எழுத்தாளர்தான் அய்யா திருவிடம் அவர்கள்.

2019-ஆம் ஆண்டு, நான் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்ற பிறகு வெளியிட்ட முதல் நூல் `திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை'. அந்தத் திராவிட இயக்க வரலாற்று நூலை எழுதியவர் அய்யா திருவிடம் அவர்கள்தான். அந்த நிகழ்ச்சியில் பேசுவதற்காக, அந்த நூலை முழுமையாகப் படித்து, ஆயத்தம் செய்து கொண்டு சென்றேன். அது 1,400 பக்கங்களைக் கொண்ட நூல். இன்னும் சொல்லப்போனால், ஒரு மாணவன் தேர்வுக்குத் தயாராவது போலத் தயாராகிச் சென்றேன்.

### திராவிட இயக்க முதல் விதை

`திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை' புத்தகத்திற்கும் எனக்கும் ஒரு நெருங்கிய பந்தம் இருக்கிறது. கலைஞர் அவர்கள் நின்று வெற்றி பெற்ற திருவல்லிக்கேணி தொகுதிக்கு நான் இன்றைய சட்டமன்ற உறுப்பினர். அந்தத் திருவல்லிக்கேணியில் இருந்து, இந்தத் திருவாரூருக்கு வருகை தந்து அய்யா திருவிடம் அவர்களுடைய புகழ் வணக்க நிகழ்ச்சியில் இன்று கலந்து கொள்கிறேன்.

திருவல்லிக்கேணியில்தான் `திராவிடன் இல்லம்' என்கிற ஒரு விடுதியை நீதிக்கட்சித் தலைவர் நடேசனார் தொடங்கினார். அதுதான் திராவிட இயக்கத்தின் முதல் விதை. பிறகு, இந்தத் திருவாரூர் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில் நம்முடைய இயக்கம்



மிகப்பெரிய ஆலமரமாய் வளர்ந்தது. அதனால்தான் அந்த நூலுக்கு வைத்த தலைப்பு `திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை'!

அந்த நூலை எழுதுவதற்கான காரணத்தை அய்யா திருவிடம் அவர்கள் வேறொரு நூலில் சொல்லியிருக்கிறார். கலைஞர் அவர்களுக்கும் தனக்கும் இடையே நடந்த சம்பவங்களை எல்லாம் நினைவுபடுத்தி `சகாப்தமும் சாமான்யனும்' என்கிற தலைப்பில் ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதில் ஒரு சம்பவத்தைச் சொல்கிறார்.

### கலைஞர் சொன்ன அந்த ஒரு வரி

கலைஞர் அவர்களை, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்தபோது, ``திராவிட இயக்க வரலாறு இன்னும் எழுதப்படாமலே இருக்கிறது'' என்று கலைஞர் அவர்கள் வருத்தப்பட்டிருக்கிறார். கலைஞர் சொன்ன அந்த ஒரு வரி திருவிடம் அவர்களை மிகவும் பாதித்துவிட்டது. அதற்காக மூன்று ஆண்டுகள் சரியாகச் சாப்பிடாமல், தூங்காமல் கடுமையாக உழைத்து அவர் எழுதிய நூல்தான் 'திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை'. இது நம் திராவிட இயக்க வரலாற்றைச் சிறப்பாகச் சொல்கிற நூல்.

அய்யா திருவிடம் அவர்களுடைய தந்தையார் தண்டவாளம் அரங்கராஜன் அவர்கள் திராவிடர் கழகத்தில் தொண்டாற்றியவர். இன்றைய தலைமுறைக்கு அவரைத் தெரியாது. நானும் அமைச்சர்களும் வாகனத்தில் வரும்போது, திருவிடம் அவர்களின் தந்தையார் பெயர் `தண்டவாளம் அரங்கராஜன்' என்று எங்களுக்கு முன்பே இருவர் பேசிக்கொண்டு வந்தார்கள். ``நானும் கலைஞரைப் போல எங்கேயாவது தண்டவாளத்தில் தலையை வைத்திருப்பாரோ?'' என்று எண்ணி வந்தேன்.

இன்றைக்குப் பெரியாரைப் பற்றி உலகம் முழுவதும் பேசுகிறோம். ஆனால், 80 வருடங்களுக்கு முன்பு பெரியாரின் கொள்கைகளை மக்களிடத்தில் பேச முடியவில்லை. மக்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். அப்போது பெரியார் கூட்டங்களுக்குச் செல்லும்போது, தன் இரண்டு கைகளையும் பாதுகாப்பாகத் தண்டவாளமாக வைத்து, பெரியாரைப் பாதுகாத்ததால்தான் அவருக்குப் பெயர் `தண்டவாளம் அரங்கராஜன்'. அவர் தந்தை பெரியார் அவர்களுக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர்.

### தண்டவாளம் அரங்கராஜன்

இந்தப் பகுதியில் குறிப்பிடத்தக்க தொழிலதிபராக இருந்தவர். 1954-இல் வீசிய ஒரு புயலில், தண்டவாளம் அரங்கராஜன் அவர்களின் தொழில் நிறுவனங்கள் எல்லாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான பணியாளர்களை வைத்துத் தொழில் நடத்திக் கொண்டிருந்த அவருடைய பொருளாதாரம் ஒரே நாளில் தலைகீழாக மாறிவிட்டது. அந்தத் துக்கத்திலேயே அரங்கராஜன் அவர்கள் மறைந்துவிட்டார். அப்போது அய்யா திருவிடம் அவர்களுக்கு 15 வயதுதான். கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்த அய்யா திருவிடம் அவர்களின் குடும்பத்திற்கு, கலைஞர் அவர்கள்தான் பக்கபலமாக இருந்தார். அவரின் படிப்புச் செலவுக்குக் கலைஞர் அவர்கள்தான் தொடர்ந்து உதவி செய்தார்கள். ``நான் வளர்த்த பிள்ளை திருவிடம்'' என்று கலைஞர் அவர்கள் எப்போதும் பெருமையாகச் சொல்லும் அளவுக்கு அய்யா திருவிடம் அவர்கள் எழுத்துப் பணியைச் செய்தார்கள்.

### இலக்கிய மாமணி

கலைஞர் அவர்களைத் தொடர்ந்து நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராக வேண்டும் என்று உளமார உழைத்தவர் அய்யா திருவிடம் அவர்கள். அவரின் எழுத்துப் பணிகளைப் பாராட்டி, கலைஞர் நூற்றாண்டில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 'இலக்கிய மாமணி' விருதை நம் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் அய்யா திருவிடத்துக்கு வழங்கிச் சிறப்பு செய்தார்கள். கலைஞர் அவர்கள் மீதும் தலைவர் அவர்கள் மீதும் இருந்த அதே பாச உணர்வை அய்யா திருவிடம் அவர்கள் என் மீதும் வெளிப்படுத்தினார்கள். கழகத்தின் வரலாற்றைப் பற்றி, என்னிடம் அடிக்கடி பேசியிருக்கிறார். அந்த உரிமையுடன்தான் இந்த நிகழ்ச்சியில் உங்களுடன் கலந்துகொண்டுள்ளேன். திருவண்ணாமலையில் ஒரு வாரத்திற்கு முன்பு வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நடந்தது. நம் கழகத் தலைவர் அவர்கள் பேசும்போது இளைஞர் அணி தம்பிமார்களையும் என்னையும் பாராட்டிப் பேசினார்.

``கொள்கையில் இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் அணி தம்பிமார்களும் உறுதியாக இருக்கிறார்கள்'' என்று தலைவர் பாராட்டியதற்கு அய்யா திருவிடம் அவர்களும் ஒரு காரணம் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்த அளவுக்கு என்னுடைய கொள்கை வழிகாட்டியாக இருந்தவர் அவர்.

### ஐந்து நாட்கள் தூங்காமல்

`திருவல்லிக்கேணி முதல் திருவாரூர் வரை' புத்தகத்தை வெளியிட்டபோது நான் ஒரு கோரிக்கை வைத்தேன். ``அய்யா, 1,400 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தை நான் ஐந்து நாட்கள் தூங்காமல் படித்துவிட்டு வந்தேன். ஏன் பெரிய பெரிய நூல்களாக எழுதுகிறீர்கள்? இளைஞர்கள் படிப்பதற்கு ஏற்றவாறு சிறிய சிறிய நூல்களாக எழுதுங்கள்'' என்று சொன்னேன். நான் சொன்னதுதான் காரணமா என்று தெரியவில்லை, அதற்குப் பிறகு சிறிய நூல்களாக எழுதி வெளியிட்டார்கள்.

கலைஞரின் கோபாலபுரம் இல்லத்துடன் அய்யா திருவிடம் மட்டுமல்ல, அவருடைய மொத்த குடும்பத்தாரும் எப்போதும் நெருங்கிய தொடர்பில் இருந்தார்கள். ஒரு முறை திருவிடம் அய்யாவும் அவருடைய மகன் வழக்கறிஞர் செழியன் அவர்களும் கலைஞர் அவர்களைச் சந்தித்தார்கள். அப்போது ``உன்னுடைய பெயர் என்னப்பா?'' என்று கலைஞர் கேட்டிருக்கிறார். இவர் `செழியன்' என்று சொல்லி முடிப்பதற்குள், இவரை `சின்ன தண்டவாளம்' என்று கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நம் கழகத்திற்குப் `பகுத்தறிவுப் பாசறை' என்று ஓர் அணி தொடங்க வேண்டும் என்று கலைஞர் அவர்கள் முடிவு செய்தபோது, அவருக்கு முதலில் நினைவுக்கு வந்த பெயர் அய்யா திருவிடம்தான். மற்ற அணிகளுக்குச் செயலாளரை நியமிப்பது போல் பகுத்தறிவுப் பாசறைக்கு, நியமித்துவிட முடியாது. தகுதியான, சரியான நபர்களைத்தான் நியமிக்க முடியும். கலைஞர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் இருந்த அந்த அமைப்பில், அவர் பெரும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தவர் அய்யா திருவிடம் அவர்கள்.

### தனிமனித இயக்கம்

அய்யா திருவிடம் அவர்கள் மறைந்தபோது நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் இரங்கல் செய்தியில், அய்யா திருவிடம் ஒரு 'தனிமனித இயக்கம்' (One-man movement) என்று அழகாகக் குறிப்பிட்டார்கள். ஒரு இயக்கம் எந்த அளவுக்குச் செயல்படுமோ, அதே அளவுக்குத் தனிமனிதனாக இருந்து இயங்கியவர் அவர். திராவிட இயக்கத்தில் இருக்கின்ற ஒவ்வொரு கருப்பு-சிவப்புத் தொண்டனும் ஒரு தனிமனித இயக்கமாகவே வளர வேண்டும். நீங்கள் ஒவ்வொருவருமே ஒரு தனிமனித இயக்கமாக இருப்பதால்தான், திராவிட இயக்கத்தை அழிப்போம் என்று வருபவர்களை ஓடவிடுகின்ற இயக்கமாக தி.மு.க திகழ்கிறது.

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் இப்போது ஒரு சவால் விட்டிருக்கிறார். ``பீகாரில் வெற்றி பெற்றுவிட்டோம், அடுத்த இலக்கு தமிழ்நாடு'' என்கிறார். திருவண்ணாமலையில் சொன்னது போல இப்போதும் சொல்கிறேன். *We are not afraid of you. We will face the consequences. We are ready to fight you.* தி.மு.க என்பது அய்யா திருவிடம் போன்ற லட்சக்கணக்கான தன்னலமில்லாத தொண்டர்களைக் கொண்ட இயக்கம். உங்களின் மிரட்டலுக்கெல்லாம் தி.மு.க-வின் அடிமட்டத் தொண்டன் கூடப் பயப்பட மாட்டான்.

### சாதாரண தேர்தல் அல்ல

இப்போது பாசிச சக்திகள், பழைய மற்றும் புதிய அடிமைகளைச் சேர்த்துக்கொண்டு தேர்தல் நேரத்தில் நம்மை எதிர்க்க வருவார்கள். அவர்களைத் தமிழ்நாட்டு மக்களின் ஆதரவுடன் விரட்ட வேண்டிய கடமை தி.மு.க தொண்டர்களுக்கு இருக்கிறது. 2026-ஆம் ஆண்டு நடைபெறப் போகின்ற தேர்தல் சாதாரண தேர்தல் அல்ல; இது தமிழ்நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்ற தேர்தல். சர்வாதிகாரத்திற்கும் ஜனநாயகத்திற்கும், சமூக நீதிக்கும் சமூக அநீதிக்கும், மாநில உரிமைகளுக்கும் டெல்லி சர்வாதிகாரத்திற்கும் இடையில் நடக்கின்ற தேர்தல்.

ஆகவே, 2026 சட்டமன்றத் தேர்தலில் கழக அணி 200-க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற வேண்டும். தமிழ்நாடு முழுவதும் உள்ள 70 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும் நம்முடைய கழக அணி வெல்ல வேண்டும். அதற்கான தொடக்கமாக இந்தத் திருவாரூர் மாவட்டம் நிச்சயம் இருக்கும். கழகம் ஏழாவது முறையாக ஆட்சியில் அமர, நம்முடைய தலைவர் அவர்களைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக்க வரப்போகும் நாட்களில் அயராது உழைப்போம். உதயசூரியன் சின்னத்திலும் கூட்டணிக் கட்சிகளின் சின்னங்களிலும் வாக்களிக்க மக்களைத் திரட்டுவோம். அதற்கான உறுதியை அய்யா திருவிடம் அவர்களின் படத்திறப்பு விழாவில் ஏற்போம். அய்யா திருவிடம் அவர்களின் புகழ் ஓங்கட்டும்!

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா, மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கலைவாணன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இளையராஜா, முன்னாள் அமைச்சர் மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் நாகை அசோகன், ஜெகவீரபாண்டியன், தகவல் ஆணையாளர்கள் வி.பி.ஆர்.இளம்பரிதி, நடேசன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில ஆலோசகர் கோவி.லெனின், கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் மாநிலச் செயலாளர்கள் பொள்ளாச்சி உமாபதி, இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், துணைத்தலைவர் போஸ் வெங்கட், மாநில இணைச் செயலாளர்கள் எழில்மாறன் செல்வேந்திரன், எம்.எஸ்.ஹரிபாபு, துணைச் செயலாளர் மீனா ஜெயக்குமார், மாவட்ட முன்னாள் ஊராட்சிக் குழுத் தலைவர் தலையாமங்கலம் பாலு, மாவட்டக் கழக நிர்வாகிகள் தன்ராஜ், வெங்கடேசன், எம்.எஸ்.கார்த்தி, ராமகிருஷ்ணன், சாந்தி, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் சங்கர், சோழராஜா, மருத்துவர் அழகு சண்முகராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்வம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பாலச்சந்தர், வலங்கைமான் அன்பரசன், ஜோதிராமன், சேரு (எ) கலியபெருமாள், புலிவலம் தேவா, பால ஞானவேல், வி.எஸ்.ஆர்.தேவதாஸ், நன்னிலம் மனோகரன், சித்தேரி சிவா, முத்துப்பேட்டை மனோகரன், வழக்கறிஞர் கவியரசன், ஆனந்த், கேப்டன் செல்வராஜ், தட்சிணாமூர்த்தி, நகரக் கழகச் செயலாளர்கள் வாரை பிரகாஷ், வீர கணேசன், ஆர்.எஸ்.பாண்டியன், பக்கிரிசாமி, பொதுக்குழு உறுப்பினர் - மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எழிலரசன், கல்யாணசுந்தரம், முருகானந்தம், வினோத்குமார், எடிசன், தாஹிர் அலி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் நிர்வாகிகள் ராசு இளங்கோ, ராம.கலைச்செல்வன், ராஜ் என்கிற கருணாநிதி, ஐயா திருவிடம் அவர்களின் துணைவியார் சாந்தி, ஸ்டாலின், செழியன் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.